தேசிய கல்வி நிறுவகம் - 2024

----

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 பாதகமான அபிப்பிராயம்

தேசிய கல்வி நிறுவகத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு உரிய தகவல்களையும் உள்ளடக்கி நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தினதும், 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தினதும் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

எனது அறிக்கையின் பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக தேசிய கல்வி நிறுவகத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் வழங்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்

1.2 பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக பாதகமான அபிப்பிராயம் வழங்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிறுவகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிறுவகம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிறுவகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக சபையின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை

தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிறுவகத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிறுவகத்தின் நிர்வாக நிறுவனத்தினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

	உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01 இன் 21(உ) பந்தியின் பிரகாரம் மொத்த நிதிக்கூற்றுத் தொகுதியில் உள்ளடக்கப்படவேண்டிய கூறொன்றாக நிறுவனம் அங்கீகரித்த பாதீட்டு புள்ளிவிபரங்களுக்கும் உள்ளபடியான புள்ளிவிபரங்களுக்கும் இடையிலான ஒப்பீடு அல்லது நிதிக்கூற்றுக்களில் பாதீட்டு புள்ளிவிவரங்கள் தனிப்பட்ட	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01 இன் 21(உ) பந்தியின் பிரகாரம் 2025 இன் வருடாந்த நிதிக்கூற்றுக்களுடன் சரியாக தயாரிக்கப்பட்ட உள்ளபடியான புள்ளிவிபரங்களுடன் பாதீட்டு புள்ளிவிபரங்களை ஒப்பீடு செய்யக்கூடிய வகையில் நிதிக்கூற்றுக்களில் தனினத்தனியான நிரலில்	நிதிக்கூற்றுத் தொகுதியில் உள்ளடக்கப்படவேண்டிய கூறொன்றாக நிறுவனம் அங்கீகரித்த பாதீடு செய்யப்பட்ட புள்ளிவிபரங்களுக்கும் உள்ளபடியான புள்ளிவிபரங்களுக்கும் இடையிலான ஒப்பீடு அல்லது நிதிக்கூற்றுக்களில் பாதீடுசெய்யப்பட்ட புள்ளிவிவரங்கள்

	நிரலொன்றாக சமர்ப்பிக்க வேண்டுமென காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	உள்ளடக்கி 2025 இன் வருடாந்த நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	தனிப்பட்ட நிரலொன்றாக சமர்ப்பித்தல் வேண்டும்.
(ஆ)	இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமம் 03 இன் 47 ஆம் பந்தியின் பிரகாரம் நிறுவனம் ஒன்றால் பொருண்மையான முன்னைய காலப் பகுதியின் தவறுகள் அவை கண்டறியப்பட்ட பின்னர் விநியோகிப்பதற்காக அங்கீகரிக்கப்பட்ட முதலாவது நிதிக்கூற்றுத் தொகுதியின் தவறும் ஏற்பட்ட காலப் பகுதிக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஒப்பீட்டு ரீதியான பெறுமதியை மீண்டும் வெளியிடுதல் பிற்போட்ட ரீதியில் சரி செய்ய வேண்டியிருந்த போதிலும் முன்னைய ஆண்டின் போது அதிகரித்துக் கணக்கீடு செய்யப்பட்ட ரூபா 20,117,007 ஆன இருப்புக்கள் மீளாய்வாண்டின் போது ரூபா 14,517,150 ஆன கணக்கீடு செய்யப்படாத பூர்த்தி செய்யப்படாத இருப்புக்கள் மற்றும் முன்னைய ஆண்டிற்குரிய ரூபா 4,572,617 ஆன முற்பணம் தீர்த்தல்களும் பிற்போட்ட ரீதியில் சீராக்கப்படாமல் திரண்ட நிதியத்தில் சீராக்கியதன் காரணமாக திரண்ட நிதியம் ரூபா 9,944,533 குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	இந்தக் கொடுக்கல் வாங்கல்கள் பிற்போட்ட ரீதியில் சீராக்க வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டில் திரண்ட நிதியத்தில் சீராக்கப்பட்டதன் மூலம் ஏற்பட்டிருந்த தவறை சரி செய்து 2025 இன் வருடாந்த நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	முன்னைய ஆண்டுகளின் தவறுகளை சரி செய்யும் போது பிற்போட்ட ரீதியில் சீராக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
(இ)	நிறுவகத்தின் அச்சிடல் மற்றும் வெளியீட்டுத் திணைக்களத்தின் கீழ் அச்சிடல் மற்றும் விற்பனை செயற்பாடுகளுக்கு உரிய பூர்த்தி செய்யப்படாத இருப்புக்கள் இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமம் 09 (ஈ) பந்தியின் பிரகாரம் கணக்கீடு செய்ய வேண்டியிருந்த போதிலும் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அச்சிடலில் காணப்பட்ட பூர்த்தி செய்யப்படாத இருப்பை மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு	இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 09 இன் பிரகாரம் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தி செய்யப்படாத இருப்புக்களை மதிப்பீடு செய்து கணக்கீடு செய்யப்பட வேண்டி இருந்த போதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்காமையால் ஏற்பட்டிருந்த தவறை சரி செய்து 2025 இன்	பூர்த்தி செய்யப்படாத இருப்புக்களை இனங்காண்பதற்கான திட்ட முறைமை ஒன்றை ஸ்தாபித்து அதன் பிரகாரம் கணக்கீடு செய்தல் வேண்டும்.

	நடவடிக்கை எடுக்கப்படவில்லை.	வருடாந்த நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	
(ஈ)	இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 11 இற்கு முரணாக மீளாய்வாண்டில் திறைசேரியில் இருந்து கிடைக்கப் பெற்ற ரூபா 30,000,000 மூலதன மானியம் நானாவித வருமானத்தின் மூலம் காண்பிக்கப்பட்டிருந்தது.	திறைசேரியில் இருந்து கிடைக்கப் பெற்ற ரூபா 30,000,000 ஆன மூலதன மானியம் தவறு ஒன்றினால் நானாவித வருமானத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து ஏற்பட்டிருந்த தவறை சரிசெய்து 2025 இன் வருடாந்த நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	மூலதன மானியம் தொடர்புடைய கணக்கீட்டு நியமத்தில் குறிப்பிடப்பட்ட பிரகாரம் மூலதன மானியத்தைக் கணக்கீடு செய்தல் நிதிச் செயலாற்றல் கூற்றில் வெளிப்படுத்தல் வேண்டும்.
(உ)	2024 ஆம் ஆண்டின் போது தேசிய கல்வி நிறுவகத்தில் இலக்கம் 13 கட்டிடத்தின் கூரை ரூபா 794,980 செலவில் மீளமைத்து பூர்த்தி செய்யப்பட்டதுடன் அது நிறுவனத்தால் பயன்பாட்டுக்கு எடுக்கப்பட்ட போதும் இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 07 (14) (ஆ) மற்றும் (22) இன் ஏற்பாடுகளின் பிரகாரம் மூலதனமாக்கப்படாமையின் காரணமாக ரூபா 794,980 இனால் நடைமுறை வேலைக் கணக்கு அதிகரித்தும், ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தது.	நவீன மயப்படுத்தலுக்கு செலவான ரூபா 794,980 தொகை தவறு ஒன்றினால் மூலதனமாக்கப்படாமல் நடைமுறை வேலைக் கணக்கில் உள்ளடக்கப்பட்டதன் காரணமாக ஏற்பட்ட தவறும் மேற்கூறப்பட்ட நியமத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் சரிசெய்து 2025 இன் வருடாந்த நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நடைமுறை வேலைகளுக்கு உரிய பணிகளைப் பூர்த்த செய்து பயன்பாட்டிற்கு எடுக்கும் போது மூலதனமாக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஊ)	அச்சிடல் மற்றும் வெளியீட்டுத் திணைக்களம் மற்றும் விடுதிகளின் கீழ் முறையே புத்தகங்கள் விற்பனை மற்றும் உணவுச் சாலைகள், விடுதிகளின் நடவடிக்கைகளின் மூலம் மீளாய்வாண்டில் முறையே ரூபா 95,969,419 மற்றும் ரூபா 53,467,508 ஆக வருமானம் உழைக்கப்பட்டிருந்த போதும் இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமம் 17 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் வருமானம், செலவினங்கள்	இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமம் 17 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் பொருட்களுக்காக தனித்தனியாக பொருள் கணக்கு தயாரித்து 2025 இன் வருடாந்த நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	அச்சிடல் மற்றும் வெளியீட்டுத் திணைக்களம் மற்றும் விடுதிகளுக்கான பொருள் கணக்கு தயாரித்து அது ஒவ்வொரு பிரிவின் வருமானம், செலவினம் மற்றும் இலாபம் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்துதல் வேண்டும்.

மற்றும் இலாபத்தினை இனங்காணக் கூடிய வகையில் நிதிக்கூற்றுக்களில் வெளிப் படுத்தப்பட்டிருக்கவில்லை.

1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நடைமுறையல்லா பணிக்கொடை ஒதுக்கீட்டு மீதி ரூபா 102,264,137 மற்றும் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட பட்டோலையின் பிரகாரம் பணிக்கொடை ஒதுக்கீட்டு மீதி ரூபா 117,158,659 ஆனமையால் ரூபா 14,894,522 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.	சரியான மீதியை கணக்கீடு செய்து ஏற்பட்டிருந்த தவறை சரிசெய்து 2025 இன் வருடாந்த நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.	சரியாக வருடாந்த பணிக்கொடைகள் கணிப்பீடு செய்து கணக்கீடு செய்யப்படல் வேண்டும்.
(ஆ)	பன்னிரண்டு மாதங்களுக்குள் விடுவிப்பதற்கு நிர்ணயிக்கப்பட்ட ஊழியர் பணிக்கொடைத் தொகை ரூபா 17,009,228 ஆக இருந்த போதிலும் நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் அது ரூபா 16,250,362 ஆக காண்பிக்கப்பட்டமையால் ரூபா 758,866 குறைத்து பணிக்கொடை கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	தவறு ஒன்றினால் ஊழியர்கள் இரண்டு பேர்களுக்கு உரிய பணிக்கொடைத் தொகையான ரூபா 758,866 குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டமையால் ஏற்பட்டிருந்த தவறை சரி செய்து 2025 இன் வருடாந்த நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.	சரியாக வருடாந்த பணிக்கொடைகள் கணிப்பீடு செய்து கணிப்பிடல் வேண்டும்.
(இ)	2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இருப்புக் கட்டுப்பாட்டு பேரேட்டு மீதி ரூபா 61,690,988 ஆக இருந்த போதும் நிதிக்கூற்றுக்களில் குறிப்பு இலக்கம் 04 இல் இருப்பு கட்டுப்பாட்டுக் கணக்கின் மீதி ரூபா 26,178,280 ஆனமையால் ரூபா 35,512,708 வேறுபாடு காணப்பட்டது.	இருப்புக் கட்டுப்பாட்டுக் கணக்கில் இருப்பு கணக்கின் மீதிகளில் ஏற்பட்டு இருந்த முரண்பாடுகளை சரி செய்து 2025 இன் வருடாந்த நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	இருப்புக்களை சரியாக கணக்கீடு செய்ய வேண்டியதுடன் அதன் காரணமாக ஏற்படக் கூடிய முறைகேடுகள் மற்றும் முரண்பாடுகளை தடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் அவ்வாறான நிலைமையை வெளிப்படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஈ)	2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பிரதான களஞ்சியத்தில் இருப்பில் உள்ளடக்கப்பட்ட ரூபா 1,827,800	2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பிரதான களஞ்சியத்தின் இருப்பில்	நிலையான சொத்துக்கள் மற்றும் இருப்புக்கள் குறித்துரைத்த ரீதியில்

	ஆன நிலையான சொத்துக்கள், சொத்துக்களாக இனங்காணப்படாமையின் காரணமாக ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கிரயம் அப் பெறுமானத்தால் குறைத்தும் இறுதி இருப்பு அப் பெறுமானத்தால் அதிகரித்தும் காண்பிக்கப்பட்டிருந்தது.	உள்ளடக்கப்பட்ட நிலையான சொத்துக் கிரயம் இருப்பில் இருந்து நீக்கி இருப்புக் கணக்கு மற்றும் நிலையான சொத்துக் கணக்கு என்பவற்றை சரி செய்து 2025 இன் வருடாந்த நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்படும்.	இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டியதுடன் எதிர்காலத்தில் அவ்வாறு ஏற்படாமல் இருப்பதற்கான திட்ட முறைமை ஒன்றை ஸ்தாபித்தல் வேண்டும்.
(உ)	மகரகம, மீப்பே கட்டிடங்களில் மீற்றர் 1,046 உள்ளக வீதி முறைமை மதிப்பீடு செய்து நிதிக் கூற்றுக்களில் கணக்கீடு செய்யப்படாது இருந்ததுடன் ரூபா 9,393,578 செலவில் 2019 ஆம் ஆண்டின் போது காபட் இட்டு அபிவிருத்தி செய்யப்பட்டிருந்த மகரகம வீதி முறைமையின் செலவினம் மூலதனமாக்கப்படாமல் மீண்டெழும் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	உள்ளக வீதி முறைமை மதிப்பீடு செய்து கணக்கீடு செய்து நடவடிக்கை எடுப்பதுடன் காபட் இடுவதற்காக செலவான ரூபா 9,393,578 தொகை மீண்டெழும் செலவினத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்த தவறை சரி செய்து அதனை அத் தொகையை மூலதனமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	மூலதன மற்றும் மூலதன செலவினங்களை சரியாக இனங்கண்டு செலவினங்கள் மற்றும் சொத்துக்களை நிதிக்கூற்றுக்களில் சரியாகக் கணக்கீடு செய்ய வேண்டியதுடன் அந்த அந்த சொத்து வகுப்பின் கீழ் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கணக்கீடு செய்தல் வேண்டும்.
(ஊ)	மீளாய்வாண்டிற்குரிய முதலீட்டு வட்டி வருமானம் மற்றும் கிடைக்க வேண்டிய முதலீட்டு வட்டி வருமானம் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் முறையே ரூபா 190,751,836 மற்றும் ரூபா 345,067,739 ஆக இருந்ததுடன் கணக்காய்வின் கணிப்பீட்டின் பிரகாரம் அந்தப் பெறுமதி முறையே ரூபா 155,965,200 மற்றும் ரூபா 162,840,212 ஆனமையால் மீளாய்வாண்டின் முதலீட்டு வட்டி வருமானம் ரூபா 34,786,636 அதிகரித்தும் பெற வேண்டிய முதலீட்டு வட்டி வருமானம் ரூபா 182,227,527 அதிகரித்தும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	நிறுவன வள முகாமைத்துவம் (ERP) முறைமையில் கணக்கீடு செய்யும் போது தவறு ஒன்றினால் பிழையான எண்ணிக்கை குறிப்பிடப்பட்டதன் மூலம் இந்த தவறு ஏற்பட்டிருந்ததுடன் அதனை சரி செய்து 2025 இன் வருடாந்த நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	மீளாய்வாண்டிற்குரிய முதலீட்டு வட்டி வருமானம் சரியாகக் கணிப்பிட்டு கணக்கீடு செய்யப்படல் வேண்டும்.
(எ)	மீளாய்வாண்டின் போது மகரகம கட்டிடத்தை சுற்றி மதில் நிர்மாணித்தல் மற்றும் பிரதிப் பணிப்பாளர் நாயகத்தின் உத்தியோகபூர்வ இல்லத்தை	நியமத்தின் பிரகாரம் அந்த செலவினங்களை மூலதனமாக்கி 2025 இன் வருடாந்த நிதிக் கூற்றுக்களுடன்	மூலதனம் மற்றும் மூலதன செலவினங்கை உரியவாறு இனங்கண்டு

	மறுசீரமைத்தல், மீப்பே கட்டிடத்தில் மண்டப இலக்கம் 04 கூரை அமைத்தல் மற்றும் பணிப்பாளர் உத்தியோகபூர்வ இல்லத்தை மறுசீரமைப்பதற்காக செலவிடப்பட்ட ரூபா 11,759,397 ஆன மூலதன செலவினம் மீண்டெழும் செலவினமாக இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக அப்பெறுமானத்தால் மீளாய்வாண்டின் நிலையான சொத்துக்கள் குறைத்தும், மீண்டெழும் செலவினங்கள் அதிகரித்தும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.	செலவினங்கள் மற்றும் சொத்துக்களை நிதிக்கூற்றுக்களில் சரியாகக் கணக்கீடு செய்ய வேண்டியதுடன் அந்த அந்த சொத்து வகுப்புக்களின் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களை கணக்கீடு செய்தல் வேண்டும்.
(ஏ)	நிறுவனத்தின் காசுப் பாய்ச்சல் கூற்றில் செயற்பாடுகள், முதலீடுகள் மற்றும் நிதி செயற்பாடுகளில் காசு உட்பாய்ச்சல்களின் கூட்டுமொத்தம் முறையே ரூபா 120,378,480 ரூபா 11,957,386 மற்றும் ரூபா 587,452 ஆக இருக்க வேண்டிய போதிலும் காசுப் பாய்ச்சல் கூற்றின் பிரகாரம் காசு உட்பாய்ச்சல்களின் கூட்டு மொத்தம் முறையே ரூபா 114,498,331 தொகை, (ரூபா 154,561,493) மற்றும் ரூபா 151,629,457 ஆக காண்பிக்கப்பட்டதன் காரணமாக தேறிய காசுப் பாய்ச்சல்களின் கூட்டு மொத்தம் முறையே ரூபா 5,880,149 தொகை, ரூபா 166,518,879 மற்றும் ரூபா 151,042,005 ஆக வேறுபாடுகள் காணப்பட்டது.	தவறை சரிசெய்து காசுப் பாய்ச்சல் கூற்று மீண்டும் தயாரித்து 2025 இன் வருடாந்த நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	செயற்பாடுகள், முதலீடுகள் மற்றும் நிதி செயற்பாடுகளில் காசு உட்பாய்ச்சல் மற்றும் வெளிப்பாய்ச்சல் நிதி நிலைமைக் கூற்றின் பிரகாரம் சரியாக இனங்கண்டு காசுப் பாய்ச்சல் கூற்று இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க சரியாகத் தயாரிக்கப்படல் வேண்டும்.
(ஐ)	நிறுவனத்தால் காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் போது காசு மற்றும் காசுக்கு சமமானவைகளின் வருட இறுதி மீதிக்கு தேறிய காசுப் பாய்ச்சலின் கூட்டுமொத்தம் சமமாக இருக்காமையினால் ஏனைய சீராக்கமாக ரூபா 59,126,107 மீதி ஒன்று செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் காசு உட்பாய்ச்சலாக குறிப்பிடப்பட்டு காசுப் பாய்ச்சல் கூற்று பிழையாகத் தயாரிக்கப்பட்டு இருந்தது.	தவறை சரிசெய்து காசுப் பாய்ச்சல் கூற்று மீண்டும் தயாரித்து 2025 இன் வருடாந்த நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	காசுப் பாய்ச்சல் கூற்றில் செயற்பாடுகள், முதலீடுகள் மற்றும் நிதி செயற்பாடுகளின் கீழ் கூட்டு மொத்தத்தின் மீதிக்கு சமமாக இல்லாதவிடத்து அதனை வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமல் பிழையான பெறுமதியை

			உள்ளடக்கி காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்காதிருத்தல் வேண்டும்.
(ஓ)	மீளாய்வாண்டின் போது பிரதான களஞ்சியத்தில் இருப்பு மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் இருப்பு ரூபா 24,752,952 ஆக இருக்க வேண்டிய போதிலும் இருப்புக் கட்டுப்பாட்டுக் கணக்கின் மீதி ரூபா 26,178,280 ஆனமையால் ரூபா 1,425,328 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.	ஏற்பட்டிருந்த தவறை சரி செய்து 2025 இன் வருடாந்த நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	இருப்பை சரியாக கணக்கீடு செய்ய வேண்டியதுடன் அதன் காரணமாக ஏற்படக் கூடிய முறைகேடுகள் மற்றும் ஊழல்களை தடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் அவ்வாறான நிலமையை வெளிப்படுத்தவும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

1.5.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

விடயம்	நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி	நேரொத்த அறிக்கையின் பிரகாரம் பெறுமதி	வேறுபாடு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
	ரூபா	ரூபா	ரூபா		
நிலையான சொத்துக்கள்	7,283,591,465	6,749,451,001	534,140,464	மீண்டும் நிலையான சொத்துக்களை மீள் மதிப்பீடு செய்து சரி செய்து நிலையான சொத்துப் பதிவேட்டை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நிலையான சொத்துப் பதிவேடு சரியாக கண்காணித்து தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

1.5.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

	விடயம்	தொகை	சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வு சான்றுகள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
		ரூபா			
(அ)	மூலதன மானியம்	(1,118,285,578)	மறை மீதியை உறுதிப்படுத்துவதற்கு உரிய ஆவணங்கள்	ரூபா 1,118,285,578 மறை மீதி தொடர்பான சான்றுகளைக் கண்டறிந்து 2025 திசெம்பர் 15 ஆம் திகதிக்கு முன் கணக்காய்வு அத்தியட்சகருக்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.	இந்த மறை மீதி ஏற்படுவதற்கான காரணமான விடயங்கள் மற்றும் மறை மீதியை உறுதிப் படுத்துவதற்கு உரிய தகவல்கள் சரியாக கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
(ஆ)	கடன் நிதியம்	70,336,385	நீண்ட காலமாக செயற்பாடற்ற கடன் நிதியமாக இருந்ததுடன் அதனை	ரூபா 70,336,385 இடர் கடன் நிதிய மீதியை உறுதிப் படுத்துவதற்கான	நீண்ட கால ரீதியில் செயற்பாடற்று காணப்படுகின்ற கடன் நிதியத்தை

			உறுதிப்படுத்துவதற்கு உரிய சான்றுகள்	எழுத்து மூல சான்றுகளை கண்டறிந்து 2025 திசெம்பர் 15 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வு அத்தியட்சகருக்கு சமர்ப்பிக்க நவடிக்கை எடுக்கப்படும்.	ஸ்தாபிப்பதன் நோக்கம் மற்றும் அதன் மீதியை உறுதிப்படுத்துவதற்கு உரிய தகவல்கள் சரியாக கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
(இ)	JICA Building Complex மீதி	660,000,000	மூலதன மானியத்தில் உள்ளடக்கப்பட்ட ரூபா 660,000,000 JICA Building Complex மீதியை உறுதிப்படுத்துவதற்கு உரிய சான்றுகள்	இந்த மூலதன மானிய மீதி தொடர்பான சான்றுகளைக் கண்டறிந்து 2025 திசெம்பர் 15 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வு அத்தியட்சகருக்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.	மூலதன மானிய பெறுவனவுகளின் நோக்கம் மற்றும் அந்த மூலதன மானிய மீதிகளை உறுதிப்படுத்துவதற்கு உரிய தகவல்கள் சரியாக கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
(ஈ)	07 மானிய மீதிகளின் கூட்டு மொத்தம்	489,456,037	20 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக காணப்படுகின்ற 07 மூலதன மீதிகளின் கூட்டுமொத்தத்தை உறுதிப்படுத்துவதற்கு உரிய சான்றுகள்	இந்த மூலதன மானிய மீதி தொடர்பான சான்றுகளைக் கண்டறிந்து 2025 திசெம்பர் 15 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வு அத்தியட்சகருக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	07 மூலதன மானிய மீதிகளின் பெறுவனவுகளின் நோக்கம் மற்றும் அதன் நீண்ட கால மூலதன மானிய மீதியை உறுதிப்படுத்துவதற்கு ரிய தகவல்கள் சரியாக கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
(உ)	APCEIU-Fund	3,393,579	குறிப்பு இலக்கம் 14 இல் உள்ளடக்கப் பட்ட APCEIU- Fund உறுதிப்படுத்துவதற்கு உரிய சான்றுகள்	இந்த நிதியத்திற்குரிய சான்றுகளைக் கண்டறிந்து 2025 திசெம்பர் 15 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வு அத்தியட்சகருக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	APCEIU- Fund இல் ஏற்படுத்துவதன் நோக்கம் மற்றும் அந்த மீதிகளை உறுதிப்படுத்துவதற்கு உரிய தகவல்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
(ஊ)	ஆராய்ச்சி அபிவிருத்திக் கான ஒதுக்கம்	3,535,000	ஆராய்ச்சி அபிவிருத்திக்கான ஒதுக்கத்தை உறுதிப்படுத்துவதற்கு உரிய சான்றுகள்	இந்த ஆராய்ச்சி அபிவிருத்திக்கான ஒதுக்கத்திற்குரிய சான்றுகளைக் கண்டறிந்து 2025 திசெம்பர் 15 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வு அத்தியட்சகருக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	ஆராய்ச்சி அபிவிருத்திக்கான ஒதுக்கம் ஏற்படுத்தப்பட்டதன் நோக்கம் மற்றும் மீதிகளை உறுதிப்படுத்துவதற்கு உரிய தகவல்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

	சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு	இணங்காமைகள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2021 நவம்பர் 16 ஆந் திகதிய இலக்கம் 2021/01 என்ற பொது முயற்சிகள் தொடர்பான வழிகாட்டிக் கோவையின் 05 ஆம் அத்தியாயத்தின் இணைப்பு 01	நிறுவனத்திற்காக ஒவ்வொரு வருடத்திற்காகவும் அங்கீகரிக்கப்பட்ட பாதீட்டு மதிப்பீடு அமுல்படுத்துவதற்காக வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்க வேண்டி இருந்ததுடன் எதிர்வரும் ஆண்டிற்கான வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் நடப்பாண்டின் திசெம்பர் 15 ஆந் திகதிக்கு முன் தயாரித்து வரிசை அமைச்சு ஊடாக பொது முயற்சிகள் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்க வேண்டி இருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	நடப்பாண்டின் திசெம்பர் 15 ஆந் திகதிக்கு முன் கையளிக்கப்படாமைக்கு அரசாங்கத்தில் இருந்து கிடைக்கின்ற நிதியேற்பாடு மற்றும் விடயங்களுக்கு உரிய அபிவிருத்தி கிடைக்கும் நிதியேற்பாடு தொடர்பாக காலம் மற்றும் நிச்சயமற்ற நிலமை காணப்படுகின்றமை காரணமாக இருந்தது.	நிறுவனத்தின் தூர நோக்கு செயற்பணி, நோக்கங்கள் மற்றும் பணிகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட வருடாந்த முன்னுரிமையின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட வரைவு செயல் நடவடிக்கைத் திட்டம் அந்த அந்த ஆண்டின் பாதீட்டு முன் மொழிவின் போது தயாரிக்க வேண்டி இருந்ததுடன் பாதீடு அங்கீகரிக்கப் பட்ட பின்னர் கிடைக்கின்ற நிதியேற்பாட்டின் பிரகாரம் வரைவு செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் திருத்துவதற்கு ஏற்படுகின்றமையால் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்து வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தை கால ரீதியில் தயாரித்துக் கொள்ளும் திட்ட முறைமை ஒன்றை ஸ்தாபித்தல் வேண்டும்.
(ஆ)	2017 ஒக்தோபர் 25 ஆந் திகதி முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இலக்கம் 2017/05	நிறைவேற்று தரத்தில் உத்தியோகத்தர்கள் அவர்கள் தமது பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதியில் இருந்து தொடர்ச்சியான சேவைக் காலத்தின் அடிப்படையில் செலுத்தப்படுகின்ற தொழில் தகைமைப்படி அதன் பிரகாரம் கணிப்பிடப்படாமல் அந்த உத்தியோகத்தர் முதலாவது நியமனத் திகதியில் இருந்து சேவைக் காலத்தை அடிப்படையாகக்	நிர்வாக மற்றும் மனித வளத் திணைக்களத்தின் மூலம் தொழிற் தகைமையின் படி செலுத்துவதற்குரிய ஒட்டு மொத்த பரிசோதனையை மேற்கொள்ளல் மற்றும் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் அதனை விரைவாக பூர்த்தி செய்து மேலதிகமாக செலுத்தப்பட்ட தொகை தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு	சுற்றறிக்கைக்கு இணங்க செலுத்த வேண்டி இருந்ததுடன் அவ்வாறு இல்லாதவிடத்து கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் பிரதான நிதி உத்தியோகத்தர்அது தொடர்பாக நடாத்தப்பட்ட கட்டுப்பாட்டு திட்டத்தை சரியாக

		கொண்டு தொழில் தகமைப்படி செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. தெரிவுப் பரிசோதனையின் பிரகாரம் நிறுவகத்தின் 58 உத்தியோகத்தர்களுக்கு 2024 – 2017 கால எல்லையில் ரூபா 17,207,201 மேலதிகமாக செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அதற்குரிய பொறுப்புக்களின் கீழான உத்தியோகத்தர்கள் தொடர்பாக மிகுதி நடவடிக்கைகளை எடுத்தல் மற்றும் ஒட்டுமொத்த பரிசோதனை மேற்கொண்டு மேலதிகமாக செலுத்தப்பட்ட பணத்தை இனங்கண்டு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.	சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	ஸ்தாபிக்காமை தொடர்பான பொறுப்பின் கீழ் வருகின்றமையினால் குறித்துரைத்த கட்டுப்பாட்டு முறைமை ஒன்றை ஸ்தாபிக்க வேண்டியதுடன் மேலதிகமாக செலுத்தியமை தொடர்பாக மிகுதி நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும்.
(இ)	1994 ஏப்ரல் 20 ஆந் திகதிய இலக்கம் 94/30 என்ற அரச கணக்குகள் சுற்றறிக்கை	வெளிநாட்டு உதவி தொடர்பாக சகல கொடுக்கல் வாங்கல்களும் பொதுத் திறைசேரியின் வெளிநாட்டு வழங்கல் திணைக்களத்தின் முன் இணக்கப்பாட்டின் அடிப்படையில் மேற்கொள்ள வேண்டியிருந்த போதிலும் கொறிய அரசாங்கத்தால் 2014 ஆம் ஆண்டில் இருந்து 2024 ஆம் ஆண்டு வரையான கால எல்லையில் வருடாந்தம் பிறீச் செஜோன் ஶ்ரீலங்கா (Bridge Sejong Sri Lanka) செயற்திட்டத்தில் ரூபா 69,439,27 தொகை தேசிய கல்வி நிறுவகத்தால் வெளிநாட்டு வழங்கல் திணைக்களத்தின் அங்கீகாரம் மற்றும் இணக்கப்பாடு இன்றி பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.	2026 இன் பாதீடு தயாரிக்கும் போது வருடாந்த பாதீட்டில் உள்ளடக்குகின்ற வெளிநாட்டு மானியங்கள் தொடர்பாக வெளிநாட்டு வழங்கல் திணைக்களத்திற்கு அறிவிப்பதற்கும் இணக்கப்பாட்டை பெற்றுக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.	அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் படி திறைசேரியின் வெளிநாட்டு வழங்கல் திணைக்களத்தின் முன் இணக்கப்பாட பெற்றுக் கொண்டு உரிய பிரகாரம் கால ரீதியில் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதன் மூலம் வெளிநாட்டு மாணியங்களை பெற்றுக் கொள்ளல் திறைசேரியின் கணக்குகளில் உள்ளடக்கும் பொறி முறை ஒன்றை அமுல்படுத்தல் வேண்டும்.
(ஈ)	தேசிய நூலகம் மற்றும் ஆவணப்படுத்தல் சேவைகள் சபையின் 2004/பூஸ்/01 (2016 திருத்தப்பட்ட) என்ற	வருடாந்த நூலகப் புத்தகங்களின் கணிப்பீடு மேற்கொள்ள வேண்டியிருந்த போதிலும் 2019 ஆம் ஆண்டின்	2025 ஆம் ஆண்டின் இறுதியில் புத்தகங்கள் தொடர்பான கணிப்பீடு மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.	தேசிய நூலகம் மற்றும் ஆவணப்படுத்தல் சேவைகள் சபையின்

சுற்றறிக்கை	பின்னர் கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை.	சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த நூலகப் புத்தகங்கள் கணிப்பீடு செய்யப்படல் வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 314,337,733 மிகையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 150,995,694 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 465,333,427 அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு பாடநெறி வருமானம் மற்றும் விடுதி வருமானம் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடயங்களின் முக்கிய பகுப்பாய்வு

பாடநெறி வருமானத்தை இனங்காணல் காசு அடிப்படையில் இருந்து அட்டுறு அடிப்படைக்கு மீளாய்வாண்டின் போது மாற்றப்பட்டதுடன் 2024 ஆம் ஆண்டின் போது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது பாடநெறி வருமானம் 366 சதவீதத்தால் அதிகரிப்பதற்கு காரணமாக இருந்தது. அவ்வாறு விடுதி வருமானம் 174 சதவீதத்தாலும் அதிகரித்திருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளின் போது புதிய கல்விச் சீர்திருத்தம் தொடர்பாக மக்களுக்கு தெரிவிப்பதற்கு ரூபா 15,412,150 செலவினத்தில் 05 தொலைக்காட்சி நிகழ்ச்சித் திட்டம் செலசினே நிறுவனத்துடன் இணைந்து தயாரிக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்ட போதும் அந்த நிகழச்சித் திட்டம் விளம்பரப் படுத்தப்பட்டிருக்கவில்லை.	2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் பாடத்திட்ட சீர்திருத்த நடவடிக்கைகள் அமுல்படுத்தாமையினால் நிகழச்சித் திட்டம் பகிரங்கப்படுத்தப் பட்டிருக்கவில்லை.	2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளின் போது தயாரிக்கப்பட்ட ஒளிபரப்படாத தொலைக்காட்சி நிகழச்சித் திட்டங்களின் உள்ளடக்கம் காலாவதியாகி இருந்தமையினால் அவ்வாறு அதனை ஒளிபரப்பாத உத்தியோகத்தர் தொடர்பாக மேலும் நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும்.

3.2 இணங்காணப்பட்ட நட்டம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
12 ஆம் தரத்தில் உயிரியல் விஞ்ஞான (ஆங்கில மொழி) பாட நூலில் உள்ள 34 பாடங்களில் தவறான விடயங்கள் உள்ளடக்கியமையின் காரணமாக வெளித்தரப்பினரால் 2019 ஆம் ஆண்டின் போது தொடரப்பட்ட	பாடப் புத்தகம் திருத்தங்களுடன் மறுபதிப்பு செய்யப்பட்டு விற்பனை செய்வதற்காக அனுப்பப்பட்டுள்ளதுடன் விற்பனை செய்யப்பட்ட பின்னர் ஏஞ்சியிருந்த 1,218	இந்த வழுக்களைத் தவிர்ப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் ஏற்பட்ட நட்டத்தை தீர்த்துக் கொள்வதற்கும்

வழக்கு நடவடிக்கைகள் 2022 ஆம் ஆண்டின் போது திரும்பப் பெறப்பட்டிருந்ததுடன் 2020 ஆம் ஆண்டின் போது இந்த பாடநூல் வழக்கொழிந்த நிலைமைக்கு உட்பட்டு இருந்ததுடன் நிறுவனத்திற்கு ரூபா 813,624 நட்டம் ஏற்பட்டிருந்தது.	புத்தகங்கள் தொடர்பாக எடுக்க வேண்டிய மிகுதி நடவடிக்கைகள் தொடர்பாக விசாரணை மேற்கொண்டு அடுத்து வரும் நிறுவனக் கூட்டத்திற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.3 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
தேசிய கல்வி நிறுவகத்தின் மகரகம கட்டிடத்தில் இலங்கை வங்கியின் மூலம் வங்கி அலுவலகம் ஒன்று மற்றும் தானியங்கி டெலர் இயந்திரம் ஒன்று என்பன நடாத்திச் செல்லப்பட்டிருந்த போதிலும் அந்த நிறுவனங்களுடன் வாடகை உடன்படிக்கை கைச்சாத்திடப்படாதுடன் நிறுவனத்திலிருந்து வாடகைத் தொகையும் அறவிடப்பட்டிருக்க வில்லை. இது தொடர்பாக முன்னைய ஆண்டின் கணக்காய்வு அறிக்கை மூலம் சுட்டிக்காட்டப்பட்டிருந்த போதிலும் 2025 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.	இலங்கை வங்கிக் கிளைக்காக வாடகை அறவிடுவதற்காக 2025 சனவரி 06 மற்றும் 2025 மே 27 ஆந் திகதிகளில் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.	நிறுவகத்தின் சொத்துக்கள் வெளித்தரப்பினர் பயன்படுத்தும் போது சட்ட ரீதியான உடன்படிக்கைகளில் கைச்சாத்திட வேண்டி இருந்ததுடன் வாடகைப் பணத்தை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	உயர்தர பாடப்பிரிவுகளின் பிரதான பாடங்களின் பிரகாரம் பாடத்திட்ட கட்டமைப்பு தயாரிக்கப்பட்டிருந்த போதும் அதற்கு இணையாக உயர்தர பாடங்களுக்கான பாடப் புத்தகங்களைத் தயாரிப்பதற்கு முன்வராமல் தேசிய கல்வி நிறுவகத்தால் விஞ்ஞான / கணித பாடத்திட்டங்களின் கீழான பாடங்களுக்காக மாத்திரம் பாடநூல்கள் தயாரித்து விற்பனை செய்யப்பட்டிருந்தது.	பதிலளிக்கப்படவில்லை.	வெளித்தரப்பினரின் நோக்கங்களுக்கு புறம்பாக நிறுவன சட்டத்திற்கு புறம்பாக நிறுவனத்திற்கு கையளிக்கப்பட்ட பணிகளை சரியாக கால ரீதியில் நிறைவேற்றி கல்வித் துறையின் தரத்தினை அபிவிருத்தி செய்து அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டி இருந்ததுடன் உயர் தரத்திற்கு பாடநூல்கள் வளப் புத்தகங்கள் அல்லாமல் பாடப் புத்தகங்கள் அச்சிட்டு மாணவர்களுக்கு வழங்குதல் தொடர்பாக முன்னுரிமை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல்

வேண்டும்.

(ஆ)	2020 – 2024 கால எல்லையில் ரூபா 483,332,938 கல்வி அமைச்சு மற்றும் வெளிநாட்டு கடன் செயற்திட்டத்தின் மூலம் தேசிய கல்வி நிறுவகத்திற்கு புதிய கல்விச் சீர்திருத்த செயற்பாடுகளுக்காக வழங்கப்பட்டதாக நிறுவனத்தில் இருந்து வழங்கப்பட்ட தகவல்களில் குறிப்பிடப்பட்ட போதிலும் புதிய கல்விச் சீர்திருத்தத்திற்காக நிதியேற்பாடு கிடைக்கின்ற மூலத்தின் பிரகாரம் பிரதான செலவின விடய குறியீட்டின் கீழ் உப செலவின விடயங்கள் இனங்கண்டு அதன் பிரகாரம் அந்த புதிய கல்விச் சீர்திருத்தங்களில் ஒவ்வொரு செயற்பாடுகளின் செலவினங்கள் அறிக்கை இடக்கூடிய பிரகாரம் செலவினங்கள் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. நிறுவகத்தின் பொதுவான செயற்பாடுகளின் கீழ் உரிய செயற்பாடுகளின் செலவினங்கள் கணக்கீடு செய்கின்ற பேரேட்டுக் கணக்குகளிலேயே புதிய கல்விச் சீர்திருத்த செலவினமும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் தேசிய கல்வி நிறுவகத்திற்கு புதிய கல்விச் சீர்திருத்தத்திற்காக 2020 ஆம் ஆண்டு முதல் 2024 கால எல்லையில் வழங்கப்பட்டிருந்த ரூபா 483,332,938 ஆன தொகை மற்றும் அதற்கு உரியதாக செலவிடப்பட்ட செலவினங்கள் இனங்காணக் கூடிய பிரகாரம் கணக்கு வைப்பதற்கும் அறிக்கைகளை பேணிச் செல்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக புதிய கல்விச் சீர்திருத்த செயற்பாடுகளின் நிதிசார்	கல்விச் சீர்திருத்தத்திற்காக இரட்டை கல்வி பிரிவு அபிவிருத்தி செயற்திட்டம் (SESIP) மற்றும் பொதுவான கல்வி நவீன மயப்படுத்தல் செயற்திட்டம் (GEMP) என்ற செயற்திட்டத்தின் கீழ் மேற்கூறப்பட்ட நிதியேற்பாடுகள் கிடைக்கப் பெற்றதுடன் அந்த நிதியேற்பாடுகளை பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட செலவினம் ERP முறைமையில் நிர்மாணிக்கப்பட்டு பாதீட்டு அறிக்கை மூலம் இனங்காண்பதற்கு முடியும்.	புதிய கல்விச் சீர்திருத்தத்திற்கான நிதியேற்பாடு கிடைக்கின்ற மூலங்களின் பிரகாரம் பிரதான செலவின விடய குறியீட்டின் கீழ் உப செலவின விடயங்களை இனங்கண்டு அதன் பிரகாரம் புதிய கல்விச் சீர்திருத்தங்களில் ஒவ்வொரு செயற்பாடுகளின் செலவினங்களையும் இனங்காணக் கூடிய வகையில் கணக்கு வைப்பதற்கும் அறிக்கைகளை பேணிச் செல்வதற்கும் நடவடிக்கை எடுத்து நிதிசார் செயல் முன்னேற்றத்துடன் ஒப்பிட்டு பௌதீக செயல் முன்னேற்றம் குறிப்பிட்ட கால அட்டவணைக்குரிய செயலாற்றல்களும் மீளாய்வு செய்ய வேண்டியதுடன் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்து புதிய கல்வி மறுசீரமைப்பின் கீழ் மொடியூல்கள் பாட விடயங்களின் கட்டமைப்பு மற்றும் பாடவிடயங்களை அபிவிருத்தி செய்து தரமான நியமத்தின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றமையை உறுதிப்படுத்தி அதற்குரிய ஏனைய செயற்பாடுகளையும் அதன் பிரகாரம் திட்டமிட்டு செயல் முன்னேற்றம் மற்றும் தரத்தினை உறுதிப்படுத்தி மீளாய்வு செய்து கணக்கு அறிக்கைகளை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

செயல் முன்னேற்றத்திற்கு இடையாக பௌதீக செயல் முன்னேற்றமும் அதன் பிரகாரம் குறித்துரைத்த காலத்தின் பிரகாரம் செயலாற்றலை பரீட்சிப்பதற்கு முடியாது இருந்தது.

(இ) 2026 ஆம் ஆண்டின் போது புதிய கல்விச் சீர்திருத்தம் அமுல்படுத்துதல் தொடர்பாக புதிய வேலைத் திட்டம் ஒன்றுக்குரிய வீதி வரைபடம் (Road Map) 2025 மார்ச் 26 ஆந் திகதி வரையில் தேசிய கல்வி நிறுவகத்தால் தயாரிக்கும் நடவடிக்கைகள் இறுதிக் கட்டத்தில் காணப்படுவதாக அமைச்சின் கணக்காய்வுக் குழுக் கூட்டத்தின் போது நிறுவகத்தின் முகாமைத்துவம் அறிவித்து இருந்தது. அதன் பிரகாரம் 2026 சனவரி மாதத்தில் 01 மற்றும் 06 தரங்களில் முதலாவது அறிமுகப்படுத்தி எதிர்வரும் ஆண்டுகளில் ஒழுங்குமுறையாக அமுல்படுத்துவதற்கு முன்மொழியப்பட்ட புதிய கல்வி மறுசீரமைப்பு வேலைத் திட்டங்களுக்குரிய குறுங்கால மற்றும் நடுத்தர மற்றும் நீண்ட கால ரீதியிலான கால அட்டவணையின் படி கல்வி அமைச்சு, கல்வி வெளியீட்டுத் திணைக்களம், இலங்கை பரீட்சைகள் திணைக்களம், தேசிய கல்வி ஆணைக்குழு, தேசிய கல்வி நிறுவகம் போன்ற நிறுவகத்திற்குரிய பணிப் பொறுப்புகள், செயற்பாடுகள் மற்றும் அவற்றின் நியமம், பொறுப்புக்கள், மதிப்பீடு செய்யப்பட்ட நிதியேற்பாடுகளை உள்ளடக்கி கல்வி அமைச்சின் மத்திய மயப்படுத்தப்பட்ட மேற்பார்வை வேலைத் திட்டம் ஒன்றுடன் தயாரிக்க வேண்டி இருந்த வீதி வரைபடத்தை பூர்த்தி

உரிய வீதி வரைபடம் தயாரித்து கல்வி அமைச்சரின் தலைமையில் நடைபெற்ற சில கூட்டங்களின் போது கலந்துரையாடப் பட்டிருந்த போதிலும் இறுதி இணக்கப்பாட்டிற்கு வர முடியாது இருந்தமையால் கல்வி அமைச்சின் செயலாளரால் இரண்டு மாற்று வழி முன்மொழிவுகள் மேற்கொள்ளப்பட்டதுடன் அதன் கல்வி சார் நடவடிக்கைகள் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அதன் போது கல்வி சார் நடவடிக்கை சபையினால் இரண்டாவது மாற்றுவழியை விட பொருத்தமான வீதி வரைபடம் ஒன்றை தெரிவு செய்யுமாறு அறிவிக்கப்பட்டதுடன் அது தொடர்பாக பணிப்பாளர் நாயகத்தால் 2025.05.09 ஆந் திகதி கடிதம் மூலம் கல்வி அமைச்சின் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

உத்தேசிக்கப்பட்ட புதிய கல்விச் சீர்திருத்த வேலைத்திட்டங்களுக்கு உரிய குறுங்கால, நடுத்தர கால மற்றும் நீண்ட கால ரீதியில் கால அட்டவணையின் படி கல்வி அமைச்சு, கல்வி வெளியீட்டுத் திணைக்களம், இலங்கை பரீட்சைகள் திணைக்களம், தேசிய கல்வி ஆணைக்குழு, தேசிய கல்வி நிறுவகம் போன்ற நிறுவனங்களுக்குரிய பணிப் பொறுப்புக்கள், செயற்பாடுகள், அவற்றின் தரம், பொறுப்புக்கள், மதிப்பீடு செய்யப்பட்ட நிதியேற்பாடுகளை உள்ளடக்கி கல்வி அமைச்சின் மத்தியப்படுத்தப்பட்ட மேற்பார்வை வேலைத்திட்டம் ஒன்றை தயாரிக்க வேண்டிய வீதி வரைபடம் (Road Map) சட்டத்தின் பிரகாரம் நிறுவனத்திற்கு கையளிக்கப்பட்ட பணிகளை நிறைவேற்றுதல் வேண்டும்.

	செய்வதற்கு 2025 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரையும் தேசிய கல்வி நிறுவகம் தவறியிருந்தது. அதன் பிரகாரம் சட்டத்தின் படி நிறுவனத்திற்கு கையளிக்கப்பட்ட பணிகளை திட்டமிட்டு அமைச்சிக்கு ஆலோசனை பெற்றுக் கொள்ளும் நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு தவறியிருந்தது.		
(ஈ)	2022 சனவரி 09 ஆம் திகதி இலக்கம் ET/RF/11/02/03 என்ற கல்விச் சீர்திருத்தம், பல்கலைக்கழகங்கள் மற்றும் தொலைக் கல்வி மேம்படுத்தல் இராஜாங்க அமைச்சுச் செயலாளரின் கடிதத்தில் குறிப்பிடப்பட்ட பிரகாரம் தேசிய கல்வி நிறுவகம் மற்றும் இராஜாங்க அமைச்சு ஒன்றிணைந்து தேசிய கல்வி ஆணைக்குழுவின் இணக்கப்பாட்டுடன் புதிய கல்விச் சீர்திருத்தம் தொடர்பாக இனங்காணப்பட்ட புதிய பாடத்திட்ட கட்டமைப்பு 2020 நவம்பர் 10 ஆம் திகதி வரையில் குறித்துரைத்த ரீதியில் இனங்காணப்பட்ட பின்னர் 2022 ஆம் ஆண்டின் போது புதிய கல்விச் சீர்திருத்தத்தின் கீழ் பாடத்திட்ட அபிவிருத்தி செய்யும் பொறுப்புக்கள் தேசிய கல்வி நிறுவகத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தது. பரீட்சிக்கப்பட்ட 2025 யூன் 06 மற்றும் செப்தெம்பர் 25 ஆம் திகதி வரையிலும் அந்த இலக்குகள் நிறுவகத்தால் மேற்கொள்ளப்படுவதுடன் அது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.		
(i)	புதிய கல்விச் சீர்திருத்தம் தொடர்பாக தற்போது பயன்படுத்தப்படுகின்ற பாடப் புத்தகங்களுக்கு பதிலாக 1 - 11 தரங்களுக்காக மொடியூலின் கீழ் பாடநெறி	புதிய கல்விச் சீர்திருத்தம் தொடர்பாக அந்த அந்த காலப் பகுதியின் போது கல்வி அமைச்சு, கல்விச் சீர்திருத்தம் தொடர்பாக	புதிய கல்விச் சீர்திருத்தங்களின் பாட அபிவிருத்தியின் கீழ் அதற்குரிய பல்வேறு நிலைகளில் தகுதி வாய்ந்த குழுக்களை நியமிப்பதன்

	அபிவிருத்தி செய்யும் பொறுப்பு தேசிய கல்வி நிறுவகத்திற்கு 2022 பெப்ரவரி மாதத்தில் இருந்து கையளிக்கப்பட்டிருந்த போதும் ஒவ்வொரு விடயத்தின் கீழ் மொடியூல், ஆரம்ப அபிவிருத்தி கட்டத்தில் இருந்து இறுதி அபிவிருத்தி கட்டம் வரையான வேலை திட்டங்களுக்குரிய ஒட்டுமொத்த திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.	இராஜாங்க அமைச்சு, சனாதிபதி செயலகம் அவ்வப்போது வழங்கிய அறிவுறுத்தல்களின் பிரகாரம் பாடத்திட்ட பொருட்களுக்குரிய 1, 2, 6, 8, 10, 11 தரங்களுக்காக வரைவு தயாரிக்கப்பட்டுள்ளது.	மூலம் ஆரம்ப முதன்மையாக பாட விடயங்களை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கைகள் கல்வி கொள்கை மற்றும் கல்விப் பிரிவின் தொழில் நுட்ப குழுக்களை இனங்காணல் போன்ற விடய செயற்பாடுகளின் கீழ் ஒட்டுமொத்த திட்டம் ஒன்று தயாரிக்க வேண்டியதுடன் மத்திய மயப்படுத்தப்பட்ட ஸ்தாபிக்கப்பட்ட நிலையம் ஒன்றின் ஊடாக ஒட்டுமொத்த திட்டத்தை உள்ளடக்கிய செயற்பாடுகளின் மூலம் அந்த அந்த ஆண்டுகளின் போது நிறைவேற்றப்படுகின்ற செயற்பாடுகள் நிறுவகத்தின் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கி அதன் செயற்பாடுகளின் கீழான பணிகள் மற்றும் பொறுப்புக்கள், அந்த அந்த பிரிவு, திணைக்களங்களின் உத்தியோகத்தர்களுக்கு கையளிப்பதற்கும் அந்த பணிகள் அந்த உத்தியோகத்தர்களால் பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் கையேற்றலை அங்கீகரித்தல் குறித்துரைத்த கால எல்லையில் பொறுப்பு வாய்ந்த முறையில் உரிய நியமத்துடன் நிறைவேற்றுவதற்குரிய மத்திய மயப்படுத்தப்பட்ட பொறிமுறை ஒன்றை ஸ்தாபித்து 1 - 11 பாட விடயங்களை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.
(ii)	மொடியூல் தயாரிக்கும் ஒட்டுமொத்த திட்டம் ஒன்றான ஒவ்வொரு ஆண்டின் போதும் நிறைவேற்றப்பட வேண்டிய மொடியூல் மற்றும் அதற்குரிய உப பணிகள் தேசிய கல்வி நிறுவகத்தின் வருடாந்த செயல் நடவடிக்கைத்	புதிய கல்விச் சீர்திருத்தங்கள் தொடர்பாக அந்த அந்த காலப் பகுதியின் போது கல்வி அமைச்சு, கல்வி சீர்திருத்தம் தொடர்பான இராஜாங்க அமைச்சு, சனாதிபதி செயலகம்	மேற்படி

	திட்டத்தில் உள்ளடக்கி கிரயம், காலம் மற்றும் பொறுப்புக்கள் குறித்துரைத்த ரீதியில் இனங்காணக் கூடிய வகையில் திட்டம் ஒன்றுடன் மொடியூல் தயாரிப்பதற்கு தேசிய கல்வி நிறுவகம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	அவ்வப்போது வழங்கிய அறிவுறுத்தல்களின் பிரகாரம் பாடத்திட்ட பொருட்களுக்குரிய 1, 2, 6, 8, 10, 11 தரங்களுக்கான வரைவு தயாரிக்கப்பட்டுள்ளது.	
(iii)	பாடத்திட்டக் கட்டமைப்பை தயாரித்தல் மற்றும் பாடத்திட்டத்தை அபிவிருத்தி செய்வதற்கு 2020 – 2024 காலப் பகுதியில் ரூபா 483,332,938 நிறுவகத்தால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் செலவிடப்பட்டிருந்த பிரகாரம் 1 முதல் 11 தரங்களுக்கான தரங்களின் மொடியூல்களை அபிவிருத்தி செய்தல் தேசிய கல்வி நிறுவகத்தின் ஒரு நிறுவகம் ஊடாக செயற்பாடுகள் மற்றும் மேற்பார்வையின் கீழ் மேற்கொள்ளப்படாது இருந்ததுடன் 2025 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரையில் தயாரிக்கப்பட்ட ஒவ்வொரு தரங்களின் கீழ் தவணையின் பிரகாரம் மொடியூல் தொடர்பான தகவல்கள் (1 மற்றும் 6 தவிர) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாது இருந்ததுடன் கல்வி அமைச்சும் அது தொடர்பான தகவல்களை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	பாடத்திட்ட சீர்திருத்தத்தை அமுல்படுத்துதல் தேசிய கல்வி ஆணைக்குழுவினால் பரிந்துரை செய்யப்பட்ட பின்னர் தேசிய கல்வி நிறுவகம் மற்றும் கல்வி அமைச்சினால் இணங்கிய பின்னர் அமுல்படுத்துதல் தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் பிரகாரம் ஆகும். அதன் பிரகாரம் 2026 ஆம் ஆண்டில் முதலாவது தவணைக்குரிய 1, 6 தரங்களுக்காக அறிமுகப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற பாடநெறி பொருட்கள் தொடர்பான தகவல்கள் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழில் சார் கல்வி அமைச்சின் குறித்துரைத்த கால அட்டவணையின் பிரகாரம் மேற்கொள்ளப்படுகின்றது.	மேற்படி
(iv)	1 மற்றும் 6 ஆம் தரங்களின் முதலாவது தவணைக்காக புதிய கல்விச் சீர்திருத்தத்தின் கீழ் அறிமுகப்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்ட புத்தகங்களின் எண்ணிக்கை 106 ஆக கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்குரிய மொடியூல்களின் எண்ணிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை. 1 மற்றும் 6 தரங்களில் இரண்டாவது மற்றும்	உரிய மொடியூல்களின் பொறுப்பில் ஈடுபடுகின்ற உத்தியோகத்தர்களால் சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப் படுகின்றமையால் தவறவிடுவதற்கான சந்தர்ப்பம் குறைவாக உள்ளதுடன் மொடியூல் தொடர்பான தகவல்கள் திணைக்களத்தில் இருந்து பணிப்பாளர் நாயகம்	மேற்படி

மூன்றாவது தவணையின் மொடியூல்களின் எண்ணிக்கை நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகம் வழங்கிய தகவல்கள் மற்றும் திணைக்களத்தின் மூலம் வழங்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 31 மற்றும் 46 ஆக வேறுபாடுகள் காணப்பட்டது. அதன் பிரகாரம் தயாரிக்கப்படுகின்ற சகல மொடியூல்களும் ஒரு பிரதான நிலையத்தின் செயற்பாடுகள் மற்றும் மேற்பார்வையில் இல்லாமல் அந்தந்த பாடங்களின் கீழ் தயாரிக்கப்பட வேண்டியதாக இனங்காணப்பட்ட மொடியூல்களை கைவிடும் ஆபத்தும் அவதானிக்கப்பட்டது. தேசிய கல்வி நிறுவகத்தால் பாடத்திட்ட கட்டமைப்பு மற்றும் பாடத்திட்டம் அபிவிருத்தி செய்யப்பட்ட மொடியூல் யாவும் 2025 சனவரி மாதத்தின் போது கல்வி அமைச்சின் விடய பணிப்பாளரின் கீழ் பாடத்திட்ட கட்டமைப்பு மற்றும் பாடத்திட்ட அபிவிருத்தி தொடர்பாக மீளாய்வு செய்து அவற்றின் விடயங்களின் உள்ளடக்கம் தொடர்பான பரிந்துரை தேசிய கல்வி நிறுவகத்திற்கு கையளிக்கப்பட்டிருந்த போதும் மீளாய்வின் கீழ் அந்த சகல குறைபாடுகளையும் இனங்கண்டு, இனங்காணப்பட்ட குறைபாடுகளை மீண்டும் சரிசெய்யப்படுகின்றமையை உறுதிப்படுத்தக் கூடிய வகையில் நிறுவகத்தால் தகவல்கள் பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் புதிய கல்வி சீர்திருத்தத்தின் கீழ் 2026 வரையில் 1 மற்றும் 6 ஆம் தரங்களுக்காக அறிமுகப்படுத்துவதற்கு தயாரிக்கப்பட்ட மொடியூல் பாடத்திட்ட கட்டமைப்பு அலுவலகத்திற்கு அறிக்கையிடும் போது ஏற்பட்ட தாமதத்தின் காரணமாக இந்த வழுக்கள் ஏற்பட்டிருந்தது.

	மற்றும் பாடத்திட்ட அபிவிருத்தி உள்ளடக்குதல் குறித்துரைத்த வகையில் மேற்கொள்ளப்பட்டிருந்தததா என கணக்காய்வில் உறுதிப்படுத்த முடியாது இருந்தது.		
(v)	புத்தகம் ஒன்றை அபிவிருத்தி செய்யும் போது ஆரம்பம் முதல் indesign திட்டத்தில் தயாரிக்க வேண்டியிருந்த போதிலும் நிறுவகத்தால் பாடங்களை அபிவிருத்தி செய்யும் போது மொடியூல் தயாரித்தல் அதன் பிரகாரம் மேற்கொள்ளாமையின் காரணமாக கல்வி அமைச்சின் தலைமையில் 1 மற்றும் 6 தரங்களில் முதலாவது தவணையின் மொடியூல்களுக்காக தொழில்நுட்ப உதவி கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தில் இருந்து பெற்றுக் கொள்வதற்கு 2025 மே வரையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.	விசேட அறிவினை உள்ளவர்களை ஈடுபடுத்தி இந்தப் பணிகள் தற்போது பூர்த்தி செய்யப்படுகின்றது.	மேற்படி
(vi)	2025 மே 06 ஆந் திகதிய கல்வி அமைச்சு செயலாளரின் ED/17/03/01/01/01 என்ற கடிதத்தின் பிரகாரம் 1 மற்றும் 6 தரங்களின் முதலாவது தவணையின் மொடியூலுடன் புத்தகங்கள் 2025 மே 15 ஆம் திகதி வரையில் கல்வி வெளியீட்டு திணைக்களத்திற்கு கையளிக்க வேண்டியிருந்த போதிலும் 04 மாத தாமதத்துடன் 2025 யூலை 01 ஆந் திகதி முதல் 2025 செப்தெம்பர் 16 ஆந் திகதி வரை 10 சந்தர்ப்பங்களில் 106 புத்தகங்களுக்கு உரிய வன்பொருள் பிரதிகள் இரண்டும் மற்றும் மென்பொருள் பிரதி ஒன்று வீதம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.	உத்தியோகத்தர்களின் பற்றாக்குறை, உரிய வளங்களை பெற்றுக் கொள்வதில் வசதியீனம் மற்றும் சில சந்தர்ப்பங்களின் போது திருத்தங்களை சேர்த்தல் போன்ற விடயங்களினால் கடிதத்தில் குறிப்பிடப்பட்ட திகதியில் உரிய புத்தகங்களை கல்வி வெளியீட்டுத் திணைக்களத்திற்கு கையளிப்பதற்கு முடியாதிருந்தது.	மேற்படி

(vii)	2025 ஆகஸ்ட் 27 ஆந் திகதிய கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகத்தின் இலக்கம் EPD/Pro/1/1/11/2024 என்ற கடிதத்தில் குறிப்பிடப்பட்ட பிரகாரம் 2025 யூலை 21 ஆம் திகதி வரையில் மொடியூல்களுடன் 50 புத்தகங்கள் மாத்திரம் கையளிக்கப்பட்டிருந்த போதிலும் 2025 யூலை 21 ஆந் திகதிய பணிப்பாளர் நாயகத்தின் அறிக்கையின் படி 1 மற்றும் 6 ஆம் தரங்களின் முதலாவது தவணைக்குரிய 106 மொடியூல்கள் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டதாக பிழையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.	பணிப்பாளர் நாயகத்தால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் தாமத வழு ஒன்று ஏற்பட்டுள்ளது.	மேற்படி
(viii)	1 மற்றும் 06 ஆவது தரங்களில் இரண்டாவது மற்றும் மூன்றாவது தவணைகளுக்காக 151 மொடியூல்கள் தயாரிக்கப்பட்டுள்ளதாக நிறுவகத்தால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட போதும் அதற்கான தொழில் நுட்ப உதவியை பெற்றுக் கொள்ளல், எழுத்துக்களின் சரியாக தன்மையைப் பரீட்சித்தல் மற்றம் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் ISBN இலக்கம் பெற்றுக் கொள்ளல் போன்ற பணிகள் நிறைவேற்றப்படாது இருந்ததுடன் இரண்டாவது மற்றும் மூன்றாவது தவணைக்காக மொடியூல்களுடன் புத்தகங்களின் மாதிரிகள் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்திற்கு 2025 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரையிலும்	2025 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரையில் மாதிரிகளை பெற்றுக் கொள்ளலை பூர்த்தி செய்வதற்கு முதலாவது தவணைக்குரிய புத்தகங்களை அச்சிட்டு கையளிப்பதற்கு முன்னுரிமை வழங்கியமையினால் முடியாதிருந்ததுடன் அது தொடர்பாக கல்வி அமைச்சு மற்றும் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.	மேற்படி

	வழங்கப்பட்டிருக்கவில்லை.		
(உ)	நிறுவகத்தின் நோக்கங்கள் மற்றும் இலக்குகளை நிறைவேற்றுவதற்குரிய கல்வி சார் பதவியணியினரால் மேற்கொள்ள வேண்டிய பணிகளை இனங்காணக் கூடிய வகையில் கடமைகளை கையளித்தல் ஆரம்பம் முதல் மேற்கொள்ளப்படாது இருந்ததுடன் நிறுவனத்தின் நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அடைந்து கொள்வதற்காக கல்வி பதவியணியினரால் மேற்கொள்ளப்படுகின்ற செயற்பாடுகளின் செயலாற்றலை அளவிடுவதற்கான குறிகாட்டிகளை உள்ளடக்கிய திட்ட முறைமை ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.	பிரதிப் பணிப்பாளர் நாயகத்திடம் இருந்து சகல கல்வி சார் பதவியணி உத்தியோகத்தர்களால் மேற்கொள்ள வேண்டிய பணிகள் தொடர்பான தகவல்கள் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. அந்த அந்த செயல் திட்டங்களுக்கான இலக்கங்கள் வழங்கப்பட்டுள்ளதுடன் அந்த இலக்கங்களுக்கு உரிய செயற்திட்டங்கள் மேற்பார்வை செய்கின்ற உத்தியோகத்தர் மற்றும் உரிய குழுக்களை தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளதுடன் அவ்வாறே ஒவ்வொரு செயற்திட்டத்திற்கும் உரிய செயற்பாடுகளின் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் வருடாந்த திட்டத்தில் காண்பிக்கப்பட்டுள்ளதுடன் அந்த வருடாந்த திட்டம் நிறுவன சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன் ஒவ்வொரு காலாண்டின் இறுதியின் போது ஒவ்வொரு திணைக்களங்களுக்கும் உரிய நிதிசார் மற்றும் பௌதீக செயல் முன்னேற்றம் சான்றுகளுடன் திட்டமிடல் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்க வேண்டி இருந்ததுடன் அது நிறுவக சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.	செயல் நடவடிக்கை திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு உத்தியோகத்தர்களின் செயலாற்றலை அளவிட முடியாதிருந்ததுடன் கடமையின் தன்மைகளுக்கு உரிய கடமைகளை கையளித்தலின் பிரகாரம் (Duty List) ஒவ்வொரு உத்தியோகத்தரும் தனித்தனியாக மதிப்பிடுவதற்கு உரியதாக குறிகாட்டிகளின் அடிப்படையில் அது மேற்கொள்ளப்படல் வேண்டும். அதனால் பதவியணியினரால் அந்த பணிகளின் தன்மையின் பிரகாரம் மேற்கொள்ளப்படுகின்ற செயற்பாடுகளின் செயலாற்றலை அளவிடுவதற்கான குறிகாட்டிகளை உள்ளடக்கிய திட்ட முறைமை ஒன்றை தயாரித்து அவற்றை கால ரீதியில் மீளாய்வு செய்தல் வேண்டும்.

3.5 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	2017 – 2024 காலப் பகுதியில் அக்ரஹார காப்புறுதி முன்மொழிவுத் திட்டம் அமுல்படுத்தப்பட்டிருந்ததுடன் திறைசேரி அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படாமல் காப்புறுதித் திட்டத்திற்கான பங்களிப்புத் தொகையில் ஒரு பகுதி அரசாங்கத்தின் நிதியத்தில் இருந்து செலவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அவ்வாறே 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளின் போது பங்களிப்புப் பணம் ரூபா 2,620,800 அரசாங்க நிதியத்தில் இருந்து செலுத்தப்பட்டிருந்தது.	அக்ரஹார காப்புறுதி திட்டம் தேசிய கல்வி நிறுவகத்தில் அமுல்படுத்துவற்காக நிருவாக சபையின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதுடன் அதற்காக நிறுவகத்தில் இருந்து உழைக்கப்பட்ட வருமானத்தில் இருந்து செலுத்தப்படுவதுடன் இதற்காக திறைசேரியில் இருந்து நிதியேற்பாடு பெற்றுக் கொள்ளப்படவில்லை.	நிறுவகத்தின் பதவியணியினருக்கு சம்பளம் மற்றும் வேதனங்கள் திறைசேரியில் இருந்து செலுத்துதல் மற்றும் அரசாங்கத்தின் பௌதீக வளங்களை பயன்படுத்தி அரசாங்கத்தின் கூட்டுத்தாபனம் ஒன்றாக ஸ்தாபிக்கப்பட்டதன் காரணமாக நிறுவகத்தின் வருமானமும் அரசாங்கத்தின் நிதியமாக இருந்தமையால் திறைசேரி அங்கீகாரத்துடன் செலவினங்களை மேற்கொள்ளல் வேண்டும்.
(ஆ)	ஆரம்ப சம்பளத்தில் 50 சதவீதத்தை விஞ்சி 2020 – 2024 காலப் பகுதியின் போது 35 உத்தியோகத்தர்களுக்கு செலுத்தப்பட்டிருந்த வளவாளர் படித் தொகை, 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் ரூபா 5,718,318 ஆக இருந்ததுடன் அதில் 2024 ஆம் ஆண்டின் போது இரண்டு உத்தியோகத்தர்களிடம் இருந்து ரூபா 400,028 தொகை மாத்திரம் அறவிடப்பட்டுள்ளதுடன் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 5,318,290 மீதியொன்று மேலும் அறவிட வேண்டியதாகக் காணப்பட்டது.	கணக்காய்வுக் குழுவுடன் எதிர்காலத்தில் கலந்துரையாடி இந்த பெறுமதியை மீண்டும் அறவிடல் தொடர்பான பொருத்தமான தீர்மானம் எடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.	மேலதிகமாக செலுத்தப்பட்டவைகளை அறவிடுதல் போதியளவான பிரகாரம் மேற்கொள்ளப் படாமையினால் கணக்கீட்டு உத்தியோகத்தரால் அது தொடர்பாக செயற்பட்டு அரசாங்கத்திற்கு ஏற்பட்டிருந்த நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.6 விளைவற்ற அல்லது குறைவாக பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள் பொறிகள் மற்றும் உபகரணங்கள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
தேசிய கல்வி நிறுவகத்திற்கு உரிய மீப்பே ஆசிரியர் பயிற்சி	பழுது பார்த்து எதிர்காலத்தில்	பயனற்றுக் காணப்படுகின்ற

நிலையத்திற்கு உரிய கட்டிடத்தில் ரூபா 2,993,200 பெறுமதியான 05 கட்டிடங்கள் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது.	பயன்படுத்துவதற்கு நடவடிக்கை தயார் செய்யப்படுகின்றது.	சொத்துக்களை நிறுவகத்தின் நோக்கங்களை நிறைவேற்வதற்காக பயன்படுத்துதல் வேண்டும்.

3.7 ஏனைய நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்ட வளங்கள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட கிரயம் ரூபா 90,354,435 நிலையான சொத்துக்கள் கையளித்தல் தொடர்பாக சட்ட ரீதியான இணக்கப்பாட்டிற்கு வராது இருக்கும் போது பிணையால் வரையறுக்கப்பட்ட கம்பனியாக ஸ்தாபிக்கப்பட்ட தெற்கு ஆசிரியர் பயிற்சி நிலையத்தின் பயன்பாட்டிற்காக அந்த சொத்துக்கள் வழங்கப்பட்டிருந்தது.	இந்த நிறுவகம் தொடர்பாக மேற்கூறப்பட்ட அமைச்சரவைத் தீர்மானம் மற்றும் கல்வி அமைச்சு செயலாளரின் கடிதத்தின் படி உரிய சொத்துக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பதற்காக 2025 சனவரி 30 ஆம் திகதிய 492 ஆவது நிறுவக சபைக்கு விடயங்கள் சமர்ப்பிக்கப்பட்டதுடன் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பதற்காக அந்த நிலையத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு தேசிய கல்வி நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் சொத்துக்கள் பயன்படுத்தல் தொடர்பாக தீர்மானம் எடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.	அரசாங்கத்தின் சொத்துக்கள் ஏனைய தரப்பினரின் பயன்பாட்டிற்கு சட்ட ரீதியான அடிப்படையில் அன்றி வழங்காது இருத்தல் வேண்டும்.

3.8 வாகன முறைமை முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட ரூபா 2,800,000 மீள்மதிப்பீட்டுப் பெறுமதி ஒன்றுடன் 02 மோட்டார் வாகனங்கள் ஓட்ட நிலையில் இல்லாதிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் நிறுவகத்தில் காணப்படுகின்ற 29 வாகனங்களுக்கு நியமிக்கப்பட்ட சாரதிகளின் எண்ணிக்கை 14 ஆனமையால் வாகனங்கள் குறைவாக பயன்படுத்தப்படுகின்றது.	சாரதிகளை சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் காணப்படுகின்ற குறைவான பயன்படுத்தல்களை தவிர்ப்பதற்காக ஒவ்வொரு சாரதிக்கும் உரிய உள்ளபடியான வாகனத்திற்கு மேலதிகமான ஓட்ட நிலையில் காணப்படுகின்ற வாகனங்களுக்காக மேலதிக வாகனம் ஒன்றை வழங்குவதற்கு நடவடிக்கை	வாகனங்களை சரியான முகாமைத்துவத்துடன் உச்ச அளவில் செயற்திறனுடன் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

எடுக்கப்பட்டுள்ளது.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

4.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
2021 நவம்பர் 16 ஆந் திகதிய இலக்கம் 2021/01 என்ற பொது முயற்சிகள் தொடர்பான செயற்பாட்டுக் கைநூலின் 6.6 ஆம் பந்தியின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் அந்த ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் 2024 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 20 நாட்கள் தாமதத்தின் பின்னர் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டதுடன் 2025 யூன் 13 ஆந் திகதிய வரைவு கணக்காய்வு அறிக்கை விநியோகிக்கப்பட்ட 2025 யூன் 19 ஆந் திகதி இலக்கம் NIE/DDG/AF/Finance/2025/14 என்ற கடிதத்தில் நிதிக்கூற்றுக்கள் கோரி விளக்கப்பட்ட பின்னர் 2025 யூலை 16 ஆந் திகதி மீண்டும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.	2025 ஆம் ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் உரிய பிரகாரம் தயாரித்து 2026 பெப்ரவரி 28 ஆம் திகதிக்கு முன் தேசிய கணக்காய்வு அலுவலகத்திற்கு கையளிப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	சுற்றறிக்கைக்கும், இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கும் இணங்க தயாரிக்கப்படுகின்ற நிதிக்கூற்றுக்கள் அந்த அந்த ஆண்டின் பெப்ரவரி 28 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

4.2 வருடாந்த அறிக்கை

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 17 ஆம் பிரிவின் பிரகாரம் 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளின் வருடாந்த அறிக்கை 2025 ஆகஸ்ட் 20 ஆம் திகதி வரையிலும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	2022/2023 இன் வருடாந்த அறிக்கைகளுக்குரிய அமைச்சரவை பத்திரம் கௌரவ கல்வி அமைச்சரின் கையொப்பத்துடன் கல்வி அமைச்சிற்கு அனுப்பப்பட்டுள்ளதுடன் 2025 யூன் 18 ஆந் திகதி மீண்டும் திருத்தப்பட்டு எங்களுக்கு திருப்பி அனுப்பி அனுப்பப்பட்டதுடன் அதன் திருத்தங்களை மேற்கொண்டு 2025 யூன் 20 ஆந் திகதி கல்வி அமைச்சிற்கு கையளிக்கப்பட்டுள்ளது.	சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து வருடாந்த அறிக்கை குறித்துரைத்த பிரகாரம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

4.3 முகாமைத்துவ தகவல்கள் முறைமையின் வினைத்திறன்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
தேசிய கல்வி நிறுவகத்தின் நோக்கங்கள், இலக்குகள் மற்றும் பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக ஒவ்வொரு துறைகளுடன் தொடர்புடைய செயற்பாடுகளின் விளைவுகளைக் காண்பிக்கின்ற முகாமைத்துவ தகவல்கள் முறைமையொன்றை நாளதுவரையாகப் பேணிச்செல்வதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நிறுவகம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	தற்போது நிறுவன வள முகாமைத்துவ முறைமை (ERP) நிறுவகத்தில் ஸ்தாபிக்கப்பட்டு அதில் 02 மொடியூல் தற்போது அமுல்படுத்தப்பட்டுள்ளதுடன் மிகுதி மொடியூலை அபிவிருத்தி செய்து அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.	முகாமைத்துவ தீர்மானம் எடுக்கக்கூடிய சரியான முகாமைத்துவ தகவல் முறைமையொன்று சகல மொடியூல்களுடனும் நாளதுவரையாகப் பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4.4 உள்ளகக் கணக்காய்வு

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 40 ஆம் பிரிவு மற்றும் நிதிப் பிரமாணம் 133 (1) இன் பிரகாரம் நிறுவனத்தின் நிதி விவகாரங்கள் மீதான தற்போதுள்ள உள்ளக கட்டுப்பாட்டு முறைமையில் பங்கேற்று அந்த செயற்பாடுகளின் பிழைகள் மற்றும் மோசடிகளைத் தடுப்பதற்கும், வெளிப்படுத்துவதற்கும் பயன்படுத்தப்படுகின்ற உள்ளக விசாரணை முறையாகவும், போதுமான தன்மை குறித்து தொடர்ச்சியான ஆய்வு மற்றும் சுதந்திரமான மதிப்பீட்டை நடத்த வேண்டும் என்றும் கூறப்பட்டிருந்தாலும், பிழைகள் மற்றும் மோசடிகளைத் தடுப்பதற்கும், வெளிப்படுத்துவதற்கும், உள்ளக கட்டுப்பாட்டு முறைமைகளை பரீட்சிப்பதற்கும் மற்றும் புதிய உள்ளக கட்டுப்பாட்டு முறைமைகளை அறிமுகப்படுத்துவதற்கும் நிறுவகத்தின் உள்ளக கணக்காய்வுப் பிரிவு போதியளவிலான பணிப்பொறுப்புக்களை மேற்கொள்ளாதிருந்தமை உள்ளக கணக்காய்வுத் திட்டம் மற்றும் அறிக்கைகளின் பிரகாரம் அவதானிக்கப்பட்டது.	03 பதவிகளில் வெற்றிடங்கள் காணப்பட்ட போதிலும் இந்த இரண்டு உத்தியோகத்தர்களினாலும் 2024 ஆம் ஆண்டின் போது காணப்பட்ட மனித வளங்களைப் பயன்படுத்தி உச்சளவிலான பங்களிப்பை வழங்கி கணக்காய்வு கடமைகள் நிறைவேற்றப்பட்டிருந்தது.	நிறுவனத்தின் சகல துறைகளையும் மேவுகை செய்யும் வகையில் தயாரிக்கப்பட்ட வரைவு உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்திற்கு அரசாங்க கணக்காய்வுப் பிரிவின் இணக்கப்பட்டைப் பெற்று அதற்கான அங்கீகாரத்தையும் பெறுவதுடன் காலரீதியிலான உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து பணிப்பொறுப்புகள் முறையான பிரகாரம் நிறைவேற்றப்படுவதையும் கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிசெய்ய நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.